
# திராவிடத்தால் வாழ்கிறோம்

831

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

10

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

## கலைஞருடன் கரம்கோர்த்த கவிக்கோ...

“பல புலவர்களை அழைத்து, ஒரு சொற்போர் போட்டியோ அல்லது கவிதைப் போட்டியோ வைத்து, அந்தப் போட்டியிலே வென்ற பிறகு, அவருக்கு என்ன பரிசு வழங்கலாம் என்று கேட்டால், அதாவது வெற்றி பல கண்டு நான் விருது பெற வரும்போது, ‘வெகுமானம் என்ன வேண்டும்’ எனக் கேட்டால் கவிக்கோ அப்துல் ரகுமானைத் தருக என்பேன்” என்று கூறுமளவுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் மனத்தில் நீங்கா இடம்பெற்றவர் கவிக்கோ அப்துல் ரகுமான். அவரது படைப்புகளைத்தான் 05.05.2025 அன்று நாட்டுடைமையாக்கி இருக்கிறது, நம் திராவிட மாடல் அரசு.

இருவரும் இணைந்து நின்ற இலக்கிய மேடைகள், கவிதை அரங்கங்கள், சொற் போர்கள், தமிழ்நாட்டின் பண்பாட்டு மாற்றங்களுக்கு அடித்தளம் அமைத்த நிகழ்ச்சிகள் எனலாம். இலக்கிய மேடைகள் வழியாக கலைஞர் பேசிய அரசியலுக்கு, கவிக்கோ உறுதுணையாக நின்றவர். குறிப்பிட்டுச் சொல்வது எனில், கலைஞரின் அரசியல் எழுச்சியும், அப்துல் ரகுமானின் கவிதை எழுச்சியும் சமகாலத்தில் நடந்தவை.

### இஸ்லாமிய தமிழ் இலக்கிய வேர்கள்

இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் வேர்களாக பல அறிஞர்கள் பங்காற்றி இருக்கின்றனர். அப்துல் காதர் புலவர், நயினார் முகம்மது புலவர், அமரகவி சவ்வாது புலவர், பிணைக்குளம் சிந்துக் களஞ்சிய புலவர், பனைக்குளம் அட்டாவதானம் அபுபக்கர் நயினார் புலவர், கீழக்கரை அப்துல் மஜீது புலவர், மெய்ஞான அருள்வாக்கு அப்துல் காதிறுப் புலவர், புலவர் காதிர் அசனார் மரைக்காயர் என பெரும்படையினர் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றியிருக்கின்றனர். நபிகள் நாயகத்தின் வரலாற்றையும் அறிவுரையையும் சமயத் தொண்டையும் விளக்கி, உமறுப்புலவர் எழுதிய ‘சீறாப்புராணம்’ இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் பெரும் பங்களிப்பாக உள்ளதை அறிவோம்.

அரபு-தமிழ் நடையில் இஸ்லாமிய இலக்கியத்தைத் தமிழ் நடைக்கு மாற்றி, இஸ்லாமியர்கள் தங்களை அதில் நிலைநிறுத்திக் கொண்ட கால இடைவெளிக்குள், தமிழ் இலக்கிய மரபிலும் புதிய மாற்றங்கள் நிகழ்ந்தன. திராவிட அரசியலின் எழுச்சிக்குப் பின்னர், 1970-களில் இலக்கியப் போக்குகளிலும் புதிய அடையாளங்கள் உருவாகின. மரபுத் தமிழிலக்கியத்தின் கட்டுப்பாடுகளை உடைத்து, தமிழ் இலக்கியம் நவீனமாகப் பயணிக்கத் தொடங்கியது. திராவிட இயக்கச் சார்புடன் இயங்கிய முற்போக்கு இலக்கியவாதிகள், **‘வானம்பாடிகள்’** என்கிற இயக்கமாகச் செயல்படத் தொடங்கினர். அந்த மரபில் இருந்து, இன்குலாப், மு.மேத்தா, கவிக்கோ அப்துல் ரகுமான் என இஸ்லாம் சமூகத்தில் இருந்து வந்த இலக்கியவாதிகள் வீச்சாக இயங்கினர். அவர்களில், திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கும், தி.மு.கழகத்தின் எழுச்சிக்கும் துணைநின்றவர்களில் முதன்மையானவர் அப்துல் ரகுமான். தனது இறுதிக்காலம்வரை கழகத்துடன், கலைஞருடன் கரம் கோர்த்து, நின்றவர் கவிக்கோ.

### முகவரி மு.க.

**“என் கவிதை உனக்கு பூச்சொரியும்:**
**...ஏனெனில், நீ எனக்கு ஆச்சரியம்**
**ஒரு நாள் தமிழிடம் முகவரி கேட்டேன்**
**-அது மு.கருணாநிதி என்றது”**

என கலைஞரைப் புகழ்ந்து அவர் பாடிய கவிதையும்,

“காற்றடித்த திசையெல்லாம் பட்டம்
போகும்!
வெள்ளித் திரை ஆட்சிக்காக
உன் வேட்டியும் உருவப்படலாம்...

என்று கவிக்கோ எழுதிய கவிதை, இன்றைக்கும் என்றைக்கும் பொருத்தமானது. எந்த நடிகருக்கும் மக்கள் செல்வாக்கு என்பது அவர்களின் திரைமுகத்துக்குத் தானே தவிர, கொள்கைக்காக அல்ல. கொள்கை இல்லாத எந்தக் கூட்டமும் நிலைக்காது என்ற கருத்தினைக் கவிதை மூலம் தந்தவர் அப்துல் ரகுமான்.

அந்தக் கொள்கை உறுதிதான் கலைஞருக்கும் கவிக்கோவுக்குமான நட்புறவின் மையமாக இருந்தது. அதுதான், 2015-ஆம் ஆண்டு மருத்துவ ஓய்வில் இருந்த நிலையிலும், கவிக்கோவின் பவள விழாவில் கலைஞரைப் பங்குபெறச் செய்தது. அந்த ஆண்டு அக்டோபர் 26-ஆம் தேதி சென்னை, காமராசர் அரங்கில் கவிக்கோவின் பவள விழாவில் பேசிய கலைஞர், “தமிழ் உலகில்-கவிஞர்கள் என்று வரிசைப்படுத்தினால்-அந்த வரிசையிலே முதல் இடத்திலே இடம் பெறக்கூடிய ஒரு கவிஞர் உண்டென்றால், அவர் என்னுடைய நண்பர் அப்துல் ரகுமான் அவர்கள்தான். நம்முடைய இனத்திற்கு, சமுதாயத்திற்கு, நாம் மேற்கொண்ட கொள்கைக்கு உரமாக, அதைத் தூக்கிப் பிடிக்கின்ற தீபமாக விளங்கக் கூடிய அற்புத மான கவிஞரை உங்கள் அத்தனை பேரோடும் சேர்ந்து பாராட்டுகிறேன்” என்றார்.




**கழகத்துடன் நீண்ட தொடர்பு கொண்ட, இஸ்லாமிய இலக்கியக் கழகம் நடத்தும் ஒன்பதாவது மாநாடு திருச்சியில் மே 9,10,11 நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டில் முதலமைச்சரும் துணை முதலமைச்சரும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.**

அரசியல்வாதிகள் சிலரும் அப்படித்தான்
பதவி காற்றடிக்கும் பக்கமெல்லாம்
போவர்
அப்துல் ரகுமானோ புயல் அடித்த
போதும் சுருண்டு விழாமல்,
சூறாவளி சுழன்றடித்தபோதும் வீழ்ந்து
விடாமல் இருந்தவர்”

என்ற கலைஞர் தந்த அறிமுகமும், காலத்துக்கும் அவர்களது நட்புக்குச் சான்றாகும்.

தி.மு.கழகம் உயர்த்திப் பிடித்த தமிழுக்குத் துணைநின்றார் என்பது மட்டுமல்ல, கவிக்கோவின் வரலாறு. தி.மு.கழகத்தை எம்.ஜி.ஆர் என்கிற திரைத்துறை பிம்பத்தால் தகர்த்து விடலாம் என்று மனக்கோட்டை கட்டியவர்களின் எண்ணவோட்டத்தைச் சிதறடிக்கும் கவிதைகளை 1970-களிலேயே எழுதியவர் கவிக்கோ. எம்ஜிஆரின் திரைப்புகழைக் கொண்டு தி.மு.கழகத்திற்கு முடிவுரை எழுதிவிடலாம் என்று கருதியவர்களுக்காக அவர் எழுதிய கவிதை இது.

**“நட்சத்திர ஆட்சியை**
**இனி, இந்த நாடு தாங்காது.**
**சில நட்சத்திரங்கள்**
**நாட்டை ஆள ஆசைப்படுகிறது...**
**தமிழா விழித்துக் கொள்...**

> **“இப்படியான மாநாட்டில்தான் இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீடு கோரிக்கையும் கலைஞரிடம் கொண்டு சேர்க்கப்பட்டது.”**

### நிறைவேற்றித் தருவேன்!


இருவரும் பங்கேற்ற மேடைகளில் மிக முக்கியமானது 1999-ஆம் ஆண்டு டிசம்பர் 2-ஆம் தேதி சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற உலகத் தமிழ் இஸ்லாமிய இலக்கிய ஆறாவது மாநாடு. அதன் நிறைவு விழாவில், இவர்கள் இருவரோடு நாகூர் ஹனீபாவும் பங்கேற்றார். அந்த மாநாட்டில் 5 தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தார்கள். இறுதியாகப் பேசிய கலைஞர் “இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 5 தீர்மானங் களை என்னிடம் கொடுத்தார்கள். அவை தீர்மானங்கள் அல்ல; 5 கட்டளைகளாகக் கருதி, அவற்றை நிறைவேற்றித் தருவேன். அவை நிறைவேற்றப்பட்டு விட்டதாக இப்போதே கருதிக்கொள்ளுங்கள்” என்று கலைஞர் கூறிய நொடியில் கரவொலியில் அதிர்ந்தது அரங்கம்.

மேலும், “இலக்கிய ஆர்வம்தான் என்னை இம்மாநாட்டில் பங்குபெறச் செய்தது. இஸ்லாமிய இலக்கிய ஆர்வம். இஸ்லாமிய இலக்கியம் என்றவொன்று தனியாக இல்லை. இஸ்லாமியர்களும் தமிழர்களே என்ற உணர்வோடு இதை நான் நோக்குகிறேன்” என்று இஸ்லாமியர் குறித்தான திராவிட இயக்கப் பார்வையை இதிலும் பொருத்திப் பேசினார் கலைஞர்.

இப்படியான மாநாட்டில்தான் இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீடு கோரிக்கையும் கலைஞரிடம் கொண்டு சேர்க்கப்பட்டது.

...நீளும்

## இணையத்தை ஆக்கிரமித்த ஏ.ஐ. பெரியார்!



சட்டகத்தில் அடங்காத பெரியாரின் படம் ஒன்று, ‘The Man who does not fit into frames’ என்ற குறிப்போடு புகழ்பெற்றது. அதன் அர்த்தமும் ஆழமானது. எந்தப் புதிய தொழில்நுட்பம் அறிமுகம் ஆனாலும், அதை பெரியார் எப்படி அணுகுவார் என்பது பேசுபொருளாக இருக்கும். அந்த வகையில், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தையும் அவர் விட்டுவைக்கவில்லை. மறைந்து அரை நூற்றாண்டுகளுக்குப் பிறகும் கருத்தியலாகவும், விவாதமாகவும் இருக்கும் பெரியார், இப்போது அழகியலாக ‘டிரெண்டிற்கு’ வந்திருக்கிறார்.

ஏ.ஐ.-யில் உருவாக்கப்பட்ட பெரியார் படங்கள் பல சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. புரட்சியாளர் அம்பேத்கர், கார்ல் மார்க்ஸோடு அமர்ந்து பேசுவது போலவும், மடிக்கணினி பயன்படுத்துவது போலவும், அம்பேத்கரை அமர வைத்து பெரியார் ‘புல்லட்’ ஓட்டிச் செல்வது போலவும், பள்ளிச் சிறுமியை அழைத்துச் செல்வதுபோலவும், பட்டம் வாங்கிய இளம்பெண்கள் பெரியாரைத் தூக்கிச் சுமந்து கொண்டாடுவது போலவும் என விதவிதமான பெரியார் படங்கள், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டு சமூக ஊடக உலகில் உலா வந்து கொண்டிருக்கின்றன.

ஃபேஸ்புக், எக்ஸ், இன்ஸ்டாகிராம், வாட்ஸ் அப் ஸ்டேட்டஸ்கள் என எங்கு சென்றாலும் ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட பெரியாரின் படம் பார்வைக்கு வந்துவிடுகிறது. இந்த டிஜிட்டல் யுகத்தில் பெரியார் இருந்தால் எப்படி இருப்பாரோ, அப்படியே அச்சு அசலாக, 94 வயது முதியவரின் முகத்தில் இருக்கும் சுருக்கங்கள் கூட துல்லியமாய் தெரியும் அளவுக்கு டிஜிட்டல் உருவகமாகியிருக்கிறார். ‘நகல் எடுக்க முடியாத அசல்’ என்று பெரியாரைச் சொல்வார்கள். அவரை அசலை விட மிக நேர்த்தியாக நகலெடுத்து அசத்துகிறது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருடன் தயாளு அம்மாவும் வாழ்த்திய என் மணவிழா!



மு.ரா.கருணாநிதி

29.10.1990 அன்று எங்களுடைய இணையேற்பு விழா, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில், வீரபாண்டியார் முன்னிலையில், சேலம் மத்திய கூட்டுறவு வங்கித் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த என் தந்தை எ.எம்.இராமசாமி அவர்களின் பணிகளைப் பாராட்டியும், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதைச் சுட்டிக்காட்டியும் உரையாற்றினார் தலைவர் கலைஞர் அவர்கள். உடன் தயாளு அம்மாள் அவர்களும், முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களும் வருகை தந்து வாழ்த்தினர்.

**– மு.ரா.கருணாநிதி,**
**மாவட்டக் கழக அவைத் தலைவர்,**
**சேலம் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஊர்வலத்தில் உதயசூரியன்!

1957-ஆம் ஆண்டு, சென்னையில் தேர்தல் பிரச்சார சிறப்பு மாநாட்டினை நடத்தியது கழகம். தலைமை நிலையமான அறிவகத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலம், சேத்துப்பட்டு அருகே, எஸ்.ஐ.ஏ.ஏ. திடலை வந்தடைந்தது. அந்த ஊர்வலத்தில்தான் முதல்முறையாக உதயசூரியன் சின்னம் அலங்கரிக்கப்பட்டு ஏந்தி வரப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131